சுற்றுநிருபம் : **03/2016**

எனது இல:- **NP/10/03/COM/CIR/2016**
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை
2016.07.15

வட மாகாணத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்கள்
மற்றும் சமாசங்களின் தலைவர்களுக்கும்,

மேற் பதவியில் உள்ள பணியாளர் ஒருவர் தனது கடமைகளுடன் கீழ்ப் பதவி ஒன்றிற்குரிய கடமைகளையும் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் அதற்கான கடமைகளைக் கவனிப்பதற்கான நியமனமும் கொடுப்பனவும்.

ஏற்கனவே பதில்கடமை மற்றும் கடமைகளைப் பற்றி வெளிவந்த சுற்றறிக்கைகளில் இதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லாத காரணத்தினால் கீழ்மட்ட பதவிக்கான கடமைகளைக் கவனிப்பதற்கான நியமனங்களை செய்து கொள்ள முடியாத நிலை உள்ளதென சங்கங்களிலிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதனையடுத்து அதனை நிவர்த்தி செய்யும் வகையில் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் கூட்டுறவு ஊழியர் தாபன விதிக்கோவை பிரிவு 1.8க்கு மேலதிகமாக கடமைகளைக் கவனிப்பதற்கான நியமனமும் மற்றும் கொடுப்பனவும் தொடர்பான ஏற்பாடு உடன் அமுலுக்கு வரும் வகையில் சேர்க்கப்படுகின்றது.

1) கடமைகளைக் கவனிப்பதற்கான பதவியானது நிரந்தர பதவியிலும் பார்க்க குறைந்த பதவியாகவும் அடுத்துவரும் அல்லது அதற்கடுத்ததான பதவியாகவும் இருத்தல் வேண்டும்.
2) எந்தக் கட்டத்திலும் கடமைகளைக் கவனிப்பதற்கான ஒழுங்கானது அக்குறித்த பதவிக்கு பதவி உயர்வு பெறும் கீழ்மட்ட பணியாளர் எவரையும் பாதிக்கமாட்டாது என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
3) கடமைகளைக் கவனிப்பதற்கான நியமனம் சங்கத்தில் ஏற்கனவே உள்ள உள்ளகக் கட்டுப்பாட்டைப் பலவீனப்படுத்துவதாக அமைதலாகாது.
4) இரு பதவிகளுக்குமான கடமைகள் சரிவரத் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டதாக நெறியாளர்குழு மாதாந்தம் தீர்மானம் எடுத்தல் வேண்டும்
5) கடமைகளைக் கவனிப்பதற்கான பதவியின் ஆரம்ப சம்பளத்தில் 1/4 பகுதியை பதிற் கடமைப் படியாக வழங்கலாம்.

மேற்படி குறிப்பிட்ட கடமைகளைக் கவனிப்பதற்கான ஏற்பாட்டின் தேவைப்பாடு குறித்து நெறியாளர் குழுவின் தெளிவான தீர்மானத்துடனும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் சிபாரிசுடனும் வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அத்துடன் 2015.04.29ம் திகதிய கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சுற்றுநிருபம் இல : 03/2015 இல் கூறப்பட்ட விடயங்களையும் கவனத்தில் கொள்ளவும்.

2016.07.15 ஆம் திகதிய ஆணைக்குழுத் தீர்மானப்படியானது.

பொ.வாகீசன்
செயலாளர்

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணசபை